# தமிழ்

எண்ணும் எழுத்தும்

# அலகு 1 - உலா போகலாம்...

தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

## தமிழ்
## ஆசிரியர் கையேடு
### பருவம் – III

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்



## அலகு 1 உலா போகலாம்...

**கற்றல் விளைவுகள்**

- படித்தவற்றை நினைவுகூர்ந்து பயன்படுத்துவர்.
- எழுத்துகள்/சொற்கள்/தொடர்களைப் படித்துப் பொருள் அறிவர்; பயன்படுத்துவர்.
- உற்று நோக்கி அடையாளம் காணுவர்; ஒப்பிட்டுக் கண்டறிவர்.
- மொழி விளையாட்டுகளில் ஈடுபடுவர்.

T7IW1

### ஆர்வமூட்டல் – பாடி மகிழ்வோம்

- பாடலை ஒருமுறை நிறுத்தி நிதானமாகப் படித்துக் காட்டுங்கள்.
- ஓசைநயத்துடன் குழந்தைகள் விரும்பும் இராகத்தில் பாடிக்காட்டுங்கள்.
- நீங்கள் பாடப்பாடக் குழந்தைகளையும் தொடர்ந்து பாடச் செய்யுங்கள்.
- பாடல் பாடுவதற்கான பல்வேறு உத்திகளைப் பயன்படுத்திப் பாடச் செய்யுங்கள்.
- இப்பக்கத்தில் விரைவுத் துலங்கல் குறியீட்டில் உள்ள காணொலியைக் காண்பித்துப் பாடச் செய்யுங்கள். (பாடநூல் – முதல் வகுப்பு – பருவம் 3 – பக்கம் 1)

**உலா போகலாம்**

நிலா பாரு நிலா பாரு
நீல வானிலே
நாம் நடக்க நாம் நடக்க
கூட வந்திடுமே

வளரும் தேயும் வளரும் தேயும்
வருத்தம் ஏதுமில்லை
வானில் மேகம் மறைத்த போதும்
வாடி நின்றதில்லை

நிலா போல நிலா போல
உலா போகலாம்
நீல வானில் நீல வானில்
நீந்தி மகிழலாம்

### என் மேடை! என் பேச்சு!

- என் மேடை! என் பேச்சு! – என்பது குழந்தைகள் பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதற்கான பகுதி.
- ஒவ்வொரு நாளும் ஓரிரு குழந்தைகளைக் கொடுக்கப்பட்ட தலைப்புகளில் 1–2 நிமிடம்வரை சுழற்சி முறையில் பேசச் செய்யவேண்டும்.
- அனைத்துக் குழந்தைகளுக்கும் வாய்ப்பளித்து, பேசத் தயங்கும் குழந்தைகளையும் ஊக்கப்படுத்தி முன்வரச்செய்து ஓரிரு தொடராவது பேச வைத்தல் வேண்டும்.

தலைப்பு: என்னைப் பற்றிப் பேசுவேன் – (பள்ளியில் எனக்குப் பிடித்தவை, பள்ளிக்கு வரும் அனுபவம், விடுமுறையில் நான், நான் வளர்த்த செடி....)


இந்த அலகிற்குரிய பகுதிகள் முடியும்வரை மேற்கண்ட தலைப்பில் குழந்தைகள் என் மேடை! என் பேச்சு! தலைப்பில் பேசுவதைத் தொடரலாம்.

### 1 சொல்லிப் பார்ப்போம்

**நோக்கம்:** கற்றுக்கொண்ட எழுத்துகளை நினைவுகூர்ந்து பயன்படுத்துதல்.

துணைக்கருவிகள்: எழுத்துவரிசை அட்டவணை/ எழுத்துவரிசைப்பட்டி/ விளக்கத்தாள்

துணைக்கருவிப் பெட்டியிலுள்ள எழுத்துவரிசைப் பட்டிகள்/ விளக்கத்தாள்/கரும்பலகையைப் பயன்படுத்தி முதல், இரண்டாம் பருவத்தில் கற்பித்த எழுத்துகளை நினைவுகூரச் செய்யுங்கள்.





Video Scribe

Video Scribe

Video Scribe

Classroom Video

Video

# தமிழ்

எண்ணும் எழுத்தும்

## அலகு 2 - கட்டெறும்பும் கட்டி வெல்லமும்

தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

# தமிழ்

## ஆசிரியர் கையேடு

### பருவம் – III

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்



## அலகு 2 கட்டெறும்பும் கட்டி வெல்லமும்

**கற்றல் விளைவுகள்**

- கதை/சூழலில் தொடர்ச்சியான நிகழ்வுகளைப் புரிந்து கொண்டும் படங்களைப் பார்த்து உரையாடுவர்; உற்றுக் கேட்பர்; நயம் பாராட்டுவர்; கதை கூறுவர்.
- எழுத்துகளின் ஒலி, வரி வடிவங்களை அறிந்து, ஒப்பிட்டு, பொருத்தி சொற்களை அடையாளம் கண்டு படிப்பர், எழுதுவர்.
- அறிந்த, படித்த சொற்களுடன் தொடர்புபடுத்திச் சொற்களின் பொருளை அறிவர்; பயன்படுத்துவர்.
- எழுதும்முறை அறிந்து எழுத்துகளை எழுதுவர்; எழுத்துகளை இணைத்துச் சொற்களை, தொடர்களைப் பார்த்தும் கேட்டும் எழுதுவர்.
- அறிந்த சொற்களைக் கொண்டு எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறு தொடர்களை எழுதுவர்.
- ஒத்த ஓசையுடைய ஒத்த ஒலிப்புடைய மயங்கொலி சொற்கள் அமைந்த சொற்கள் / தொடர்களைப் படித்து நா நெகிழ், நா பிறழ் பயிற்சி பெறுவர்.

### ஆர்வமூட்டல் – இவர் யார் தெரியுமா?



குழந்தைகளே, ஒன்றைப்பற்றிய குறிப்புகளை நான் ஒவ்வொன்றாகக் கூறிக்கொண்டே வருவேன்; ஊகித்து விடையைக் கூற விரும்புபவர்கள், கைகளை உயர்த்த வேண்டும். கையை உயர்த்தியவருக்கு விடைசொல்ல வாய்ப்பு உண்டு. ஒருவர் ஒரு விடைதான் கூறவேண்டும். ஒருவருக்கு ஒருமுறை மட்டுமே வாய்ப்பு. யார் முதலில் சரியான விடையைக் கூறுகிறாரோ அவரே வெற்றிபெற்றவர். விளையாடலாமா? என்று கேட்டுக் கீழ்க்காணும் குறிப்புகளை ஒவ்வொன்றாகக் கூறுங்கள். குழந்தைகள் விடைகூறும்வரை குறிப்பைத் தொடரலாம்.

1. காட்டிலும் இருக்கும்; ஊருக்குள்ளும் இருக்கும்.
2. இதற்கு உயிர் இருக்கும்.
3. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும்.
4. கூட்டமாக வாழும்.
5. இனிப்பை விரும்பி உண்ணும்.
6. பாதையில் குறுக்கிட்டால் கடித்துவிடும்.
7. ஆறு கால்கள் இருக்கும்.
8. சேமிக்கும் பழக்கம் உண்டு.
9. வரிசையாகச் செல்லும்.
10. சுறுசுறுப்பாக இருக்கும்.
11. அதன் இனத்தில் இது சற்றே பெரியது.
12. கருப்பு நிறத்தில் இருக்கும்.

சில குறிப்புகளைக் கூறும்போதே குழந்தைகள் விடையைக் கண்டுபிடித்துவிட்டால் குறிப்புகள் கூறுவதை நிறுத்திவிடலாம். இறுதிக் குறிப்புவரை கூறியும் விடையைக் கண்டுபிடிக்கவில்லை எனில்,கட்டெறும்பு என்று கூறும்வரை குறிப்புகளைத் தொடர்ந்து கூறுங்கள்.இறுதியாக அனைத்துக் குழந்தைகளையும் பாராட்டுங்கள்.

இந்தக் கட்டெறும்பு, ஒரு பொருளைக் கண்டுபிடித்தது. அந்தப் பொருள் எது? அது கட்டெறும்புக்குக் கிடைத்ததா? இல்லையா? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமா? வாருங்கள், கதையைக் கேட்டுத் தெரிந்து கொள்வோம் என்று கூறிக் கதையைச் சுவைபடக் கூறுங்கள்.




[Video Scribe](#) [Video Scribe](#)

[Training Ppt](#)

எண்ணும் எழுத்தும்

# English

# Module 1 - Revision


GOVERNMENT OF TAMILNADU

எண்ணும் எழுத்தும்


TEACHER'S HANDBOOK

ENGLISH

TERM - III

Department of School Education

Untouchability is inhuman and a crime


1 Revision

Language learning objectives

By the end of the module, students can

- recall the letters of the alphabet .
- recall the words with short vowel sounds.
- recall language structures and use them in context.
- recall content words such as names of common flowers, birds, animals, fruits, vegetables and things.
- recall sight words and read simple sentences.

Warm up

Greeting

Teacher : Good morning, students.
Students : Good morning, teacher.
Teacher : Welcome back to school. Are you happy today?
Students : Yes teacher.
Teacher : Shall we sing a welcome song?
Students : Yes teacher.

Hello ... Good morning

1a. Large group activity - Song time

Let all students stand in a circle. Sing the song with actions and let them listen to you. Ask students to repeat the actions first, let them sing along with you later.

Welcome welcome how do you do?
I am so glad to see you.
Sit down sit down in a circle
Hold each other's hands too
Happy, happy that's how we feel
When we are together
Happy! Happy!
When we are together!

Happy! Happy! Happy!

1

Story Audio

Story Audio

Song


Training Ppt

Animation

Video Scribe

# English

# Module 2 - People around us



GOVERNMENT OF TAMILNADU

எண்ணும் எழுத்தும்

TEACHER'S HANDBOOK

ENGLISH

TERM - III

Department of School Education

Untouchability is inhuman and a crime



2 People around us

Language learning outcomes

By the end of the module, students can

- listen to, repeat and recite chants, songs and poems with action.
- associate names of people around us and talk about them.
- identify, read and write words with digraphs, **ch ph sh wh th** and **ng**.
- use articles 'a' and 'an' in sentences with comprehension.
- use the structures, "What do you want to become? I want to become ________" in conversation.
- use pronouns in sentences.
  I am .... My
  He is .... His
  She is .... Her
  It is .... Its
- read and write level based words, phrases and sentences with comprehension.

Warm up

**Teacher** : Good morning students, how are you?

**Students** : Good morning teacher, we are fine. Thank you.

**Teacher** : Today we shall start our class with a song.

Hello ... Good morning

1a. Large group activity - Song time

Tell me ... tell me

Tell me, tell me
What does a driver do?
A driver drives a bus for you and me.

Tell me, tell me
What does a tailor do?
A tailor stitches clothes for you and me.

Tell me, tell me
What does a doctor do?
A doctor treats sickness for you and me.

Tell me, tell me
What does a postman do?
A postman brings letters for you and me.

7

Video Shorts

Video Shorts

Story Audio

Classroom Video

Video Scribe

Teacher Champions

Student Champions

# கணக்கு

# அலகு 1 - எண்களை அறிவேன்

தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

## கணக்கு

## ஆசிரியர் கையேடு

பருவம் – III

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

## 1 எண்களை அறிவேன்

### கற்றல் விளைவுகள்

- 1 முதல் 99 வரையிலான எண்ணிக்கை, எண்ணுருக்கள் அறிதல்.
- 99 வரையிலான எண்பெயர்களை அறிதல் மற்றும் ஒற்றை எண், இரட்டை எண் அறிதல்.
- 999 வரையிலான எண்பெயர்களை அறிதல் மற்றும் ஒற்றை எண், இரட்டை எண் அறிதல்.

### ஆயத்தப்படுத்துதல்

**தேவையான பொருள்கள் :** காகிதக் குவளைகள் 40, எண்ணட்டைகள் (1-20) – 2 தொகுப்பு மற்றும் எண்பெயரட்டைகள் (1-20) – இரண்டு தொகுப்பு.



மாணவர்களை மூன்றுமூன்று பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்க வேண்டும். இவ்வாறு குழு அமைக்கும் பொழுது அனைத்து நிலை மாணவர்களும் குழுவில் இடம் பெறும் வண்ணம் குழு பிரிக்க வேண்டும். அதில் இரண்டு குழுக்களை அழைத்து மேசையின் எதிரெதிரே நிற்க வைக்க வேண்டும்.

ஒவ்வொரு குழுவிற்கும் முன்பாக 20 காகிதக்குவளைகளையும் எண்ணட்டைகளையும் எண்பெயர் அட்டைகளையும் வைக்க வேண்டும். ஆசிரியர் 20க்கு குறைவாக ஏதேனும் ஓர் எண்ணைக் கூற முதல் மாணவர்(அரும்புநிலை) அந்த எண்ணிக்கையில் குவளைகளை எடுத்து. மேசையில் பிரித்து வைக்க வேண்டும். இப்பொழுது இரண்டாம் மாணவர்(மொட்டுநிலை) அவற்றைச் சரிபார்த்து, அந்த எண்ணிக்கைக்கேற்ற எண்ணட்டையை எடுத்து வைக்க வேண்டும். அடுத்து மூன்றாம் மாணவர்(மலர்நிலை) அதற்குரிய எண்பெயர் அட்டையை எடுத்து வைக்க வேண்டும். இறுதியாக மூவரும் சேர்ந்து காகிதக்குவளைகளைப் பிரமிடு போல் அடுக்கி வெற்றி எனக் கூறவேண்டும். முதலில் முடிக்கும் குழுவிற்கு ★★ அடுத்து முடிக்கும் குழுவிற்கு ★ வழங்க வேண்டும்.

### சிறகுகள் விரியட்டும்

| | அரும்பு | மொட்டு | மலர் |
|---|---|---|---|
| பயிற்சிநூல் | 1.1 | 1.1, 1.2 | 1.1, 1.2, 1.3 |
| பாடநூல் பக்க எண் | 17 | - | - |



Classroom Video

Classroom Video

Video

Video Scribe

Video Scribe

# கணக்கு

## அலகு 2 - கூட்டல் மற்றும் பெருக்கலை அறிவேன் - I

தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

**கணக்கு**

**ஆசிரியர் கையேடு**

**பருவம் – III**

**பள்ளிக் கல்வித்துறை**

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

### 2 கூட்டல் மற்றும் பெருக்கலை அறிவேன் – I

**கற்றல் விளைவுகள்**

C1WX9

- 1 முதல் 20 வரையிலான எண்களைப் பயன்படுத்தி இனமாற்றமின்றிக் கூட்டலை அறிதல்.
- ஈரிலக்க எண்களின் கூட்டலை அறிதல் மற்றும் கூடுதல் 99க்கு மிகாமல் தொடர்கூட்டலை அறிதல்.
- மூவிலக்க எண்களின் கூட்டலை அறிதல்.
- 999க்கு மிகாமல் தொடர்கூட்டலை அறிதல் மற்றும் தொடர் கூட்டல் மூலம் பெருக்கலைப் புரிந்து கொள்ளுதல்.

**ஆயத்தப்படுத்துதல்**

**தேவையான பொருள்கள்:** மாணவர்களின் குறிப்பேடு மற்றும் பென்சில்.

மாணவர்களை இரண்டு பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர் குறிப்பேட்டையும் வரைவதற்கு பென்சிலையும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது ஆசிரியர் கரவொலி எழுப்பியவுடன் மாணவர்கள் அவரவர் குறிப்பேட்டில் பூக்களை வரைய வேண்டும். சிறிது நேரம் இடைவெளிவிட்டு மீண்டும் கரவொலி எழுப்பியவுடன் மாணவர்கள் அவரவர் வரைவதை நிறுத்தி விட வேண்டும். பின்னர் ஒவ்வொருவரும் தான் வரைந்த பூக்களின் எண்ணிக்கையைக் குறிப்பேட்டில் எழுத வேண்டும். குழுவில் உள்ள இருவரும் தங்களுடைய எண்ணிக்கையைக் கூட்டி விடை காண வேண்டும். சரியாகச் செய்த மாணவர்களுக்கு ★ வழங்கிப் பாராட்ட வேண்டும். செயல்பாட்டில் கரவொலிகளுக்கு இடையேயான நேர இடைவெளியைக் குறைக்கும்போது சிறிய எண்களைக் கூட்டுவதற்கும் நேர இடைவெளியை அதிகரிக்கும்போது பெரிய எண்களைக் கூட்டுவதற்கும் வாய்ப்பளிக்க முடியும்.

**கூட்டல்**

**செயல்பாடு 1**

**தேவையான பொருள்கள்:** விலை குறிக்கப்பட்ட பழங்கள் அல்லது காய்கறிகளின் பட அட்டைகள் மற்றும் கூட்டல் அட்டை.



| | நூ | ப | ஒ |
|---|---|---|---|
| | | | |
| + | | | |
| | | | |
| | | | |



Video Scribe

Video Scribe

Video Scribe

Song

# கணக்கு

# அலகு 3 - கூட்டல் மற்றும் பெருக்கலை அறிவேன் - II


தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

கணக்கு

ஆசிரியர் கையேடு

பருவம் – III

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

## 3 கூட்டல் மற்றும் பெருக்கலை அறிவேன் – II

### கற்றல் விளைவுகள்

- 1 முதல் 20 வரையிலான எண்களைப் பயன்படுத்தி இனமாற்றமின்றிக் கூட்டலை அறிதல்.
- கூடுதல் 99க்கு மிகாமல் தொடர்கூட்டலை அறிதல்.
- ஈரிலக்க எண்ணுடன் ஓரிலக்க எண்ணைப் பெருக்குவதை அறிதல்.

### ஆயத்தப்படுத்துதல்

**தேவையான பொருள்கள்:** 2, 3, 4 மற்றும் 5 பெருக்கல் வாய்பாடு அட்டைகள் (படத்தில் காட்டியுள்ளது போல்).




மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். வகுப்பறைக்கு வெளியே படத்தில் காட்டியுள்ளவாறு கட்டங்களை வரைய வேண்டும். ஒவ்வொரு குழுவையும் அவர்களுக்கு உரிய கட்டத்தின் முன்பு வரிசையாக நிற்க வைக்க வேண்டும். அந்தக் கட்டங்களுக்கு இருபுறமும் அருகேயுள்ள வட்டத்தில் ஒரு வட்டத்திற்கு ஒரு வாய்பாடு எனப் பெருக்கல் கூற்று எழுதப்பட்ட அட்டைகளை வைக்கவேண்டும். ஆசிரியர் தொடங்கலாம் என்று கூறியவுடன் குழுவில் இருக்கும் மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து, வட்டத்திலிருந்து பெருக்கல் கூற்று அட்டைகளை வாய்பாட்டின் வரிசைப்படி எடுத்து, அதனைத் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கட்டங்களில் ஒவ்வொன்றாக வைக்கவேண்டும். இவ்வாறு வைத்தபின் கட்டத்தின் மறுப்பக்கத்தில் வரிசையாக நின்று கொள்ளவேண்டும். இரண்டு குழுக்களில் எந்தக் குழு சரியாகவும் விரைவாகவும் முடிக்கிறதோ, அதுவே வெற்றி பெற்ற குழுவாகும். இதேபோல் மற்ற வாய்பாடுகளுக்கும் இச்செயல்பாட்டைத் தொடரவேண்டும்.



Story Audio

Training Ppt

Training Ppt